2021 பிப்ரவரி 25] [திரு. கே.ஏ. செங்கோட்டையன்]

உள்ளங்களில் மட்டுமல்ல; கல்வியாளர்கள், பெற்றோர்களின் உள்ளங்களிலும் மகிழ்ச்சியைத் தருகின்ற நாளாக இந்த நாள் அமைந்திருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காக பள்ளிக் கல்வித் துறையின் மூலமாக கோடானு கோடி நன்றி மலர்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு விதி 110–ன்கீழ் இரண்டு அறிவிப்புகளை வெளியிட்டிருக்கிறார்கள். அந்த இரண்டு அறிவிப்புகளும் முத்தான அறிவிப்புகளாக இருக்கின்றன. முதலாவதாக, அரசு ஊழியர்கள் ஓய்வுபெறும் வயதை 60 ஆக உயர்த்தியிருக்கிறார்கள். அது அதிகாரிகள் மத்தியிலே, அரசு ஊழியர்கள் மத்தியிலே பெரிய அளவில் மகிழ்ச்சியை ஏற்படுத்தும் என்ற வகையில், நான் மனதாரப் பாராட்டுகிறேன். இரண்டாவதாக, இந்தக் கல்வியாண்டில் ஒன்பதாம் வகுப்பு, பத்தாம் வகுப்பு, பதினொன்றாம் வகுப்பு பயிலும் மாணவர்கள் அனைவரும் தேர்ச்சி பெற்றதாக அறிவித்திருக்கிறார்கள். கொரோனா பாதிப்பு உள்ள இந்தச் சூழ்நிலையில், மாணவர்கள் மற்றும் அரசு ஊழியர்கள் இந்த இரண்டு அறிவிப்புகளையும் மனதார வரவேற்பார்கள் என்று நான் நிச்சயம் நம்புகிறேன். அந்த அடிப்படையில், இந்த அவையினுடைய வாழ்த்துகளோடு, என்னுடைய வாழ்த்துகளையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) பாரதியார் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2021

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2021 ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு உயர் கல்வி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2021 ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உயர் கல்வி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

(ஆ) தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணைய (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2021

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணைய (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணைய (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.